**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 10-03-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-03-10 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-03-11 | 2023-03-12 | 2023-03-13 | 2023-03-14 | 2023-03-15 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 35.0 | 35.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 24.0 | 24.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 6.0 | 6.0 | 8.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 250 | 270 | 270 | 250 | 290 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.0°C - 36.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 25.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு தெளிவாக காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 06 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

பகல் நேரங்களில் வெயில் அதிகமாக இருப்பதால் கறவை மாடுகளின் மேல் தண்ணீர் தெளித்து அதன் வெப்பத்தை தணிப்பது மூலம் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம். மேலும் அசோலா பசுந்தீவனமாக பயன்படுத்தலாம்.

## குறுஞ்செய்தி :

3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| உளுந்து | பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும் அடுத்த 15 நாட்கள் இடைவெளியில் டிஏபி (2 சதம் ) பொட்டாஷ் (1சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும், டிஏபி கரைசலுக்கு பதிலாக பயறு அதிசயம் எக்டருக்கு 5 கிலோ என்ற அளவில் பொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். |
| எள் | முளைத்த இறவை எள் பயிரில் மாங்கனீசு சல்பேட் குறைபாடு தென்படும். இதை நிவர்த்தி செய்ய ஒரு எக்டருக்கு 5 கிலோ மாங்கனீசு சல்பேட் உடன் 45 கிலோ மணல் கலந்து மாலை வேளையில் தூவி மறுநாள் காலையில் நீர் பாசனம் செய்யவும். |
| எள் | எள் வளரும் பருவம் அதிக வெப்பநிலை காரணமாக எள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலில் நன்கு கண்காணித்து ஊடுருவி பாயும் பூச்சிக்கொல்லி பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | பகல் நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் தென்னையில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும். பொறிகளை ஒரு ஏக்கருக்கு 5 அல்லது 6 இடங்களில் வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது நிலவும் வெப்பமான பருவச் சூழ்நிலையில் மாடுகளை பாதுகாக்க 3 பெரிய நெல்லிக் காய்களை இடித்து தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம். மேலும் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 1 கை பிடி அளவு வெந்தயம், 1 கைபிடி அளவு நெல்லிக்காய் வற்றல் போன்றவைகளை நன்கு ஊர வைத்து அரைத்து தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம். |
| வெள்ளாடு | மேற்கூறிய வானிலையில், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளரக்கும் விவசாயிகள் ஆட்டு அம்மை அதிகமாக வரும் இடங்களில் பொது மேய்ச்சல் தரைக்கு ஆடுகளை ஓட்டிச் செல்லக்கூடாது. விவசாயிகள் கால்நடை மருத்துத் வரை அணுகி தக்க ஆலோசனை பெற்று ஆட்டு அம்மைக்கான தடுப்பூசி மார்ச் மாதம் போட வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | கோடை காலத்தில் 30 முதல் 45 நாட்களுக்கு மேற்பட்ட வேளாண்மை மற்றும் காய்கறிப் பயிர்களில் பயிர்கள் சத்து பற்றாக்குறை மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த 350 மில்லி பஞ்சகாவியம் 10 லிட்டர் தண்ணீருடன் ஒட்டும் திரவம் 15 மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். |

| **பிற ( மண்/ நில தயாரிப்பு)** | **பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை** |
|---|---|
| பொது ஆலோசனை | வருகின்ற நாட்களில் வெப்பநிலை உயர்வின் காரணமாக மண்ணின் ஈரத்தன்மை வெகுவிரைவில் குறைய வாய்ப்புள்ளது. எனவே சாகுபடி செய்துள்ள தோட்டக்கலைப் பயிர்களை சுற்றிலும் காய்ந்த புற்கள்,இலை,தழைகள் மற்றும் பண்ணை கழிவுகளை கொண்டு மூடாக்கு இடுவதால் மண்ணின் ஈரத்தன்மை பதுக்கப்படும். |